# நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும் நேரத்தில் உங்களது உரிமைகள்




காவல் நிலையத்தில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது பலருக்குக் கடினமான ஒன்றாக இருக்கிறது.




போலிஸ் உங்களிடம் கேள்வி கேட்கும்போது, உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் மற்றும் உங்களுக்குப் புரியவில்லை என்றால் அதை அவர்களிடம் கூறுவது சிறந்தது.




தகவல் தொடர்பு உதவி தேவைப்படுபவர்களுக்கு கேள்விகளைப் படித்து பதிலளிக்க சிறிது கூடுதல் நேரம் தேவைப்படும் என்பது போலிஸுக்குத் தெரியும்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
|  | கைது செய்யப்பட்டு சிறைக் காவலுக்குச் செல்வது | பக்கம் 4 |
|  | போலிஸ் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வது | பக்கம் 5 - 6 |
|  | பொருத்தமான வயதுவந்த ஒருவரின் உதவி வேண்டுமென கேட்பது | பக்கம் 7 |
|  | நீங்கள் காவல் நிலையத்தில் இருப்பதை ஒரு வழக்கறிஞரிடம் சொல்வது | பக்கம் 8 |
|  | நீங்கள் காவல் நிலையத்தில் இருப்பதை வேறு யாரிடமாவது சொல்வது | பக்கம் 9 |

| | | |
|---|---|---|
|  | நீங்கள் 16 வயதுக்குட்பட்டவராக இருந்தால் அல்லது 16 அல்லது 17 வயதுடையவராக இருந்து கட்டாயக் கண்காணிப்பு ஆணையின் கீழ் இருந்தால் | பக்கம் 10 -11 |
|  | நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீர்கள் அல்லது கைதாணையின் கீழ் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளீர்கள் என்றால் என்ன ஆகும்? | பக்கம் 12 - 13 |
|  | உங்களை எவ்வளவு காலம் காவல் நிலையத்தில் வைத்திருக்கலாம்? | பக்கம் 14 |
|  | மருத்துவர் அல்லது செவிலியரைச் சந்தித்து ஆலோசனைப் பெறுவது | பக்கம் 15 |
|  | புகாரளிப்பது | பக்கம் 16 |



## கைது செய்யப்பட்டு சிறைக் காவலுக்குச் செல்வது

உங்களை ஏன் கைது செய்துள்ளார்கள் என்பதை போலிஸ் உங்களிடம் தெரிவிப்பார்கள்.




உங்களுக்குப் புரிகிறதா என போலிஸ் உங்களிடம் கேட்பார்கள்.

உங்களுக்கு எந்த நேரத்திலாவது புரியவில்லை என்றால், நீங்கள் "இல்லை" எனச் சொல்ல வேண்டும்.

உங்களுக்குப் புரிந்தால் மட்டுமே "ஆம்" எனச் சொல்லுங்கள்.

## போலிஸ் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வது



அமைதிகாக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு.

போலிஸ் கேட்கும் கேள்விகள் எதற்கும் நீங்கள் பதில் அளிக்கத் **தேவையில்லை**. **ஆனால்** நீங்கள் அவர்களிடம் கூற வேண்டியவை–




**உங்கள் பெயர்**




**நீங்கள் வசிக்குமிடம்**




**உங்கள் பிறந்த நாள்**

**நீங்கள் எங்கு பிறந்தீர்கள் மற்றும் உங்கள் தேசியம்**

**இந்த விவரங்களில் சில உங்களுக்குத் தெரியவில்லை என்றால், உங்களுக்குத் தெரியவில்லை என்பதை போலிஸிடம் கட்டாயம் சொல்ல வேண்டும்.**

**வேறு எந்தக் கேள்விகளுக்கும் நீங்கள் பதில் அளிக்கவில்லை என்றால், உங்களுக்கு காவல் துறையுடன் பிரச்சனை ஏற்படாது.**

நீங்கள் சொல்வது அனைத்தையும் எழுதிக்கொள்வதாக போலிஸ் உங்களிடம் சொல்வார்கள்.

கேள்விகளுக்கு பதிலளிக்க நீங்கள் சம்மதித்தால் , உங்கள் வழக்கு நீதிமன்ற விசாரணைக்குப் பரிந்துரைக்கப்பட்டால் நீங்கள் கூறிய அனைத்தையும் ஆதாரமாகப் பயன்படுத்தலாம்.




COURT HOUSE

## பொருத்தமான வயதுவந்த ஒருவரின் உதவி வேண்டுமென கேட்பது



உங்களுக்கு உதவி தேவையெனில் “**பொருத்தமான வயது வந்தோர் ஒருவரை அழையுங்கள்”** என போலிஸிடம் கூறுங்கள்.

பொருத்தமான வயது வந்தோர் என்பவர் போலிஸ் என்ன சொல்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள உதவுபவர்கள். இந்தச் சேவை இலவசமானது.




பொருத்தமான வயது வந்தோர் உங்கள் உரிமைகளையும் என்ன நடக்கிறது என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள உதவுவார்.

போலிஸ் கேட்கும் கேள்விகள் உங்களுக்குப் புரியவில்லை எனில் அவற்றை அவர்கள் விளக்குவார்கள்.

போலிஸ் சொல்வதை மட்டுமல்லாமல் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும் அவர்கள் விளக்கலாம்.




பொருந்தமான வயது வந்தோர் உங்களுக்கு ஆலோசனைக் கூற முடியாது.

நீங்கள் கேட்கவில்லை என்றாலும் கூட, பொருத்தமான வயதுவந்தோர் ஒருவர் தேவை என போலிஸ் நினைத்தால் அவர்களை அழைப்பார்கள்.

**உங்களுக்குப் புரியவில்லை எனில் அதைத் தெரிவிப்பது முக்கியமாகும்.**

**நீங்கள் காவல் நிலையத்தில் இருப்பதை ஒரு**

**வழக்கறிஞரிடம் சொல்வது**



உங்களிடம் கேள்விகள் கேட்கப்படும் முன்னரே எந்த நேரத்திலும் தனியாக ஒரு **வழக்கறிஞரிடம்** பேசும் உரிமை உங்களுக்கு உண்டு. இந்தச் சேவை இலவசமானது.

**வழக்கறிஞர் என்பவர் உங்கள் உரிமைகளைப் பாதுகாப்பவர் மற்றும் உங்களுக்காக வாதாடுவதில் உதவக்கூடியவர்.**

நீங்கள் வழக்கறிஞரிடம் பேசும்போது பொருத்தமான வயதுவந்தவர் உங்களுடன் இருக்க முடியாது.

நீங்கள் வழக்கறிஞரிடம் பேச வேண்டுமெனில் போலிஸ் உங்களிடம் கேட்கும்போது நீங்கள் "ஆம்" எனக் கூற வேண்டும்.



உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் இருந்தால் அவர்களின் பெயரை நீங்கள் போலிஸிடம் தெரிவிக்க வேண்டும். போலிஸ் அவர்களை அழைக்க முயற்சி செய்வார்கள். இந்தச் சேவை இலவசமானது.

உங்களுக்கு வழக்கறிஞர் இல்லாவிட்டால் அதை நீங்கள் போலிஸிடம் தெரிவிக்க வேண்டும், அவர்கள் உங்களுக்காக ஒருவரை அழைப்பார்கள்.



போலிஸ் இயன்றவரை விரைவாக உங்களுக்காக ஒரு வழக்கறிஞரை அழைப்பார்கள். இந்தச் சேவை இலவசமானது.

போலிஸ் உங்களை விசாரணை செய்யும்போது வழக்கறிஞர் உங்களுடன் அறையில் இருக்கலாம். இந்தச் சேவை இலவசமானது.

நீங்கள் உங்கள் வழக்கறிஞரிடம் தொலைபேசியில் பேசலாம் அல்லது வழக்கறிஞர் உங்களைப் பார்க்க காவல் நிலையம் வரலாம். அதை வழக்கறிஞர் முடிவு செய்வார்.

நீங்கள் அவர்களுடன் தொலைபேசியில் உரையாடியிருந்தாலும், விசாரணைக்கு ஒரு சட்ட முகவரின் ஆதரவை நீங்கள் பெற விரும்புகிறீர்களா என்று இரண்டாவது முறையாக உங்களிடம் கேட்கப்படும்.

## நீங்கள் காவல் நிலையத்தில் இருப்பதை வேறு யாரிடமாவது

## சொல்வது




நீங்கள் காவல் நிலையத்தில் இருப்பதை வேறு யாரிடமாவது சொல்லும் உரிமை உங்களுக்கு இருக்கிறது.

போலிஸ் யாரை அழைப்பதை நீங்கள் விரும்புகிறீர்கள் என உங்களிடம் கேட்பார்கள்.




நீங்கள் விரும்பும் நபர் உங்கள் குடும்ப உறுப்பினர், உங்கள் பார்ட்னர், உங்கள் தொழிலில் ஒருவர், உங்கள் நண்பர் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவராக இருக்கலாம்.

நீங்கள் அந்த நபரிடம் பேசுவதற்கு அனுமதி கிடைக்காமலும் போகலாம்.

**நீங்கள் 16 வயதுக்குட்பட்டவராக இருந்தால் அல்லது 16 அல்லது 17 வயதுடையவராக இருந்து கட்டாயக் கண்காணிப்பு ஆணையின் கீழ் இருந்தால்:**



நீங்கள் காவல் நிலையத்தில் இருப்பதை உங்கள் பெற்றே
பராமரிப்பாளரிடம் தெரிவிக்க போலிஸ் கட்டாயம் முய





காவல் நிலையத்தில் உங்களை உங்கள் பெ
பராமரிப்பாளர் வந்து சந்திக்கும் உரிமை உ



18
வயதுக்குட்பட்டவர்கள்மட்டுமேஇந்தசந்திப்ப



**விதிவிலக்கான சூழல்கள்** இருந்தால் தவிர போலிஸ் உங்களை விசாரணை செய்யும் போது வழக்கறிஞர் உங்களுடன் கட்டாயம் இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, யாராவது காயப்படுவதைத் தடுக்க உங்களிடம் முக்கியமான தகவல்கள் இருப்பதாக போலிஸ் நினைத்தால், உங்கள் வழக்கறிஞர் வருவதற்கு முன்பு அவர்கள் உங்களிடம் கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கும்.

நீங்கள் 16 அல்லது 17 வயதுடையவர்கள் மற்றும் கண்காணிப்பு ஆணை அல்லது இடைக்கால கட்டாய ஆணையின் கீழ் இருப்பவர் எனில், சட்ட முகவரைப் பெற நீங்கள் மறுக்கக்கூடாது.



விதிவிலக்கான சூழல்களில் கூட அமைதிகாக்கும் உ
உண்டு.

## நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீர்கள் அல்லது கை
## நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளீர்கள் எ



நீங்கள் **குற்றஞ்சாட்டப்பட்டு இருந்தால்**, நீங்கள் வெளியே
அல்லது நீங்கள் போலிஸ் காவலில் தங்கி அடுத்த வேலை நா
வேண்டியிருக்கலாம்.



நீங்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீர்கள் எனில் போலிஸ்:

- **உங்கள் விரல்ரேகைப் பதிவுகளை எடுப்பார்கள்**

- ஒரு**DNA மாதிரியை**எடுப்பார்கள்
(ஒருகாட்டன்பட்வைத்துஉங்கள்வாயினுள்மென்

- **உங்களைப் புகைப்படம் எடுப்பார்கள்**







நீங்கள்**வாரண்டில்**காவல்நிலையத்திற்குஅழைத்துவரப்பட்
நீங்கள்போலிஸ்காவலில்தங்கிஅடுத்தவேலைநாளில்நீதிமன்

## உங்களை எவ்வளவு காலம் காவல் நிலையத்தில் வைத்திருக்கலாம்?




போலிஸ் **உங்கள் மீது எந்தக் குற்றமும் சுமத்தாமல் 12 மணி நேரம்** வரை வைத்திருக்கலாம்.








உங்களை 4 மணிநேரத்திற்கு மேல் வைத்திருந்தால் போலிஸ் உங்களுக்கு சாப்பிடும் நேரத்தில் உணவு வழங்குவார்கள்.

உங்களுக்கு ஒவ்வாத உணவு ஏதேனும் இருந்தால் இயன்றவரை விரைவில் அதை போலிஸிடம் தெரிவிக்கவும்.

உங்களுக்கு தாகம் எடுத்தால், அவர்களிடம் தண்ணீர் கேட்கவும்.




**போலிஸ் ஆய்வாளர் (அல்லது நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராக இருந்தால் முதன்மை ஆய்வாளர்) ஒப்புக்கொண்டால் மட்டுமே 24 மணிநேரம் வரை** போலிஸ் உங்களை காவலில் வைக்கலாம்.



இந்த முடிவைப் பற்றி உங்கள் கருத்தைக் கூற உங்களுக்கு உரிமை உள்ளது அல்லது உங்களுக்காக உங்கள் வழக்கறிஞர் போலிஸிடம் பேசுவதை நீங்கள் தேர்வு செய்யலாம்.



## மருத்துவர் அல்லது செவிலியரைச் சந்தித்து ஆலோசனைப் பெறுவது

உங்களுக்கு உடல்நலக்குறைவு இருந்தால் அல்லது காயம் ஏற்பட்டிருந்தால் ஒரு **மருத்துவர்** அல்லது **செவிலியரை** சந்தித்து ஆலோசனைப் பெறும் உரிமை உங்களுக்கு இருக்கிறது.

நீங்கள் மருத்துவர் அல்லது செவிலியரை சந்தித்து ஆலோசனைப்பெற வேண்டுமெனில் போலிஸிடம் தெரிவிக்கவும்.

உங்களுக்கு உடல்நலக்குறைவு இருந்தால் அல்லது மருந்துகள் எடுத்துக்கொண்டிருந்தால் நீங்கள் அதை போலிஸிடம் சொல்வது முக்கியமாகும்.





உங்களுக்கு போதைப்பொருள் அல்லது மதுப்பழக்கம் இருந்தால் அல்லது உங்களுக்கு நீங்களே தீங்கு விளைவிக்க நினைக்கும் எண்ணமிருந்தால் போலிஸிடம் அதை தெரிவிப்பது அவசியம்.





**நீங்கள் காவல் கண்காணிப்பில் இருக்கும் போது போலிஸ் உங்களை கவனித்துக்கொள்ள இது உதவும்.**

**புகாரளிப்பது**



போலிஸ் உங்களை நடத்தும் விதம் குறித்து **புகாரளிக்கும்** உரிமை உங்களுக்கு இருக்கிறது.

ஸ்காட்லாந்து போலிஸூக்கு எதிராக நீங்கள் புகார் செய்தால், அது தவறாக கருதப்படாது.

நீங்கள் காவல் கண்காணிப்பில் இருக்கும்போது புகாரளிக்கலாம்.

நீங்கள் காவல் கண்காணிப்பில் இருக்கும்போது புகாரளிக்க விரும்பினால், ஆய்வாளர் அல்லது உயரதிகாரி ஒருவரிடம் பேச வேண்டுமென்று தெரிவிக்கலாம்.




நீங்கள் புகாரளிக்க விரும்பினால்உங்களை விடுவித்தப் பிறகு, நீங்கள் எந்த காவல் நிலையத்திற்கும் செல்லலாம்.

உங்கள் கைதின் போது அல்லது போலிஸ் காவலில் இருக்கும் போது போலிஸ் அதிகாரி ஒருவரால் உங்களுக்கு அடிபட்டிருந்தால் அல்லது காயம் ஏற்பட்டிருந்தால் நீங்கள் போலிஸ் ஸ்காட்லேண்ட் புரொபஷனல் ஸ்டாண்டர்ட்ஸ் துறையில் புகாரளிக்க வேண்டும்.




புகாரளிக்க 101 என்ற எண்ணை அழைக்கவும் அல்லது உங்கள் உள்ளூர் காவல் நிலையத்திற்குச் செல்லவும்.




உங்களுக்காக வேறொருவரை புகார் அளிக்குமாறும் நீங்கள் கேட்கலாம். அந்த நபர் பெற்றோர், நண்பர், பார்ட்னர் அல்லது நீங்கள் நம்பும் ஒருவராக இருக்கலாம்.

உங்கள் எழுத்துப்பூர்வ அனுமதியை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

**பீபிள் ஃபர்ஸ்ட் (ஸ்காட்லாந்து) மூலம் SOLD நெட்வொர்க் சார்பாக தயாரிக்கப்பட்டது**

**77-79 Easter Road,**

**Edinburgh,**

**EH7 5PW**

**0131 478 7707**

உத்தரவாத எண். 173180 மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஸ்காட்டிஷ் சாரிட்டி எண். SC 026039 ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட நிறுவனம்

People First (Scotland)

made with photosymbols®

POLICE SCOTLAND
Keeping people safe
POILEAS ALBA